உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

சுடர் : 41
கதிர் : 202

செவ்வாய்க்கிழமை
16 ஜூன் 2026

ஆனி 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –12
விலை – ரூபா 50



செம்மணிப் புதைகுழியில்

## 10 என்புத் தொகுதிகள் நேற்று அகழ்ந்தெடுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16
செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து இரண்டு குழந்தைகளின் என்புத் தொகுதிகள் உட்பட 10 என்புத் தொகுதிகள் நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்டன. செம்மணிப் புதைகுழியின் மூன்றாம்கட்ட அகழ்வுப் பணியின் 25 ஆம் நாள் »11



காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி

# வலி.வடக்கு மக்கள் நேற்றுப் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 16
வலிகாமம் வடக்குப் பகுதியில் இராணுவத்தின் பிடியிலுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி பொதுமக்களும், சிவில் அமைப்பினரும் இணைந்து யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். »11

## நலமாகவே உள்ளார் சுரேஷ் சாலே

அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 16
கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் சுரேஷ் சாலேயின் உடல்நிலை பாரதூரமாக இல்லை - இவ்வாறு அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் »11

## சாலேயின் கடவுச்சொல்லை சி.ஐ.டி.க்கு வழங்கக்கூடாது!

முன்னாள் அமைச்சர் வீரசேகர பதற்றம்

கொழும்பு, ஜூன் 16
சுரேஷ் சாலேவின் மடிக்கணனி மற்றும் தொலைபேசி என்பவற்றின் கடவுச்சொற்களை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு வழங்கக்கூடாது என்று முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சாலே தனது »11

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பில்

## சி.ஐ.டி.யின் விசாரணைகளை குழப்புவதற்குச் சதித்திட்டம்!

விமல், கம்மன்பில உள்ளிட்ட 6 பேருக்கு எதிராக விசாரணை

கொழும்பு, ஜூன் 16
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் இடம்பெற்றுவரும் விசாரணைகளைக் குழப்பும் வகையில் செயற்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டில் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, திலித் ஜயவீர »11

தமிழரசுக் கட்சியின்

## நிர்வாகத்தெரிவில் தொடர் குழப்பங்கள்

வாலிபர் முன்னணித் தலைவர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 16
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவில் குழப்பங்கள் உள்ளதாக அந்தக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட வாலிபர் முன்னணித் தலைவர் க.பிருந்தாபன் சுட்டிக்காட்டியுள்ளார்.
இலங்கைத் »10


வவுனியா

## தாதியர் கல்லூரியில் நேற்றுக் குழப்பநிலை

சான்றிதழை இழுத்தடிப்பதாகக் குற்றச்சாட்டு

வவுனியா, ஜூன் 16
வவுனியாவைரவப்புளியங்குளத்தில் உள்ள தனியார் தாதியர் கல்லூரி தமது சான்றிதழை வழங்குவதற்கு இழுத்தடிக்கின்றது என்று குறிப்பிட்டு தாதிய மாணவர் »11

வித்தியா படுகொலை வழக்கு

## குற்றவாளிகள் அனைவருக்கும் உறுதியானது மரணதண்டனை

யாழ்ப்பாணம், ஜூன் 16
யாழ்ப்பாணம் புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா கடத்தப்பட்டு, கூட்டு வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட »11

மட்டக்களப்பில் இடம்பெற்ற

## ஐந்து படுகொலைகளில் பிள்ளையானுக்குத் தொடர்பு

உறுதிப்படுத்தியது சி.ஐ.டி.



கொழும்பு, ஜூன் 16
மட்டக்களப்பில் இடம்பெற்ற 5 படுகொலைகளில் பிள்ளையானுக்குத் தொடர்புள்ளது என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.
மட்டக்களப்பில் கடந்த 2008ஆம் »11

ஜெனிவாவில் வெள்ளியன்று

## அமெ. - ஈரான் இடையே போர்நிறுத்த ஒப்பந்தம்!

தெஹ்ரோன், ஜூன் 16
அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையில் கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக இடம்பெற்றுவந்த போர் முடிவுக்கு வந்துள்ளது. இரு நாடு »11




மக்கள் ம[illegible]மிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

**கொவிசெத**
திகதி: 15.06.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 4461
ஆங்கில எழுத்து: A
வெற்றி இலக்கங்கள்: 09 | 39 | 71 | 74
விசேட எழுத்து: A

**ஹந்தஹண ராசி சுப பலன்**
திகதி: 15.06.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 1528
வெற்றி இலக்கினம்: கன்னி
வெற்றி இலக்கங்கள்: 04 | 11 | 16 | 30

**NLB ஜய**
திகதி: 15.06.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 0487
ஆங்கில எழுத்து: G
வெற்றி இலக்கங்கள்: 5 | 9 | 5 | 9

**மெகா பவர்**
திகதி: 15.06.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 2567
ஆங்கில எழுத்து: K
சுப்பர் இலக்கம்: 04
வெற்றி இலக்கங்கள்: 24 | 30 | 50 | 58

**மஹஜன சம்பத**
திகதி: 15.06.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 6219
ஆங்கில எழுத்து: C
வெற்றி இலக்கங்கள்: 7 | 4 | 4 | 2 | 0 | 9

**தன நிதானய**
திகதி: 15.06.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 2249
ஆங்கில எழுத்து: I
வெற்றி இலக்கங்கள்: 05 | 18 | 44 | 77
விசேட எழுத்து: I

**சுப தவசக்**
திகதி: 15.06.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 0335
வெற்றி இலக்கினம்: துலாம்
வெற்றி இலக்கங்கள்: 34 | 35 | 45



# ‘சிசு செரிய’ பேருந்துச் சேவை வடக்கில் நேற்று ஆரம்பம்!

**வவுனியா, ஜூன் 16**

**வட மாகாணத்தில் முதன்முறையாக பாடசாலை மற்றும் உயர் கல்வி மாணவர்களதும், ஆசிரியர்களதும் பாதுகாப்பான போக்குவரத்தை உறுதிசெய்யும் நோக்கில் ‘சிசு செரிய’ விசேட பேருந்துச் சேவை நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.**

வவுனியா பேருந்து நிலையத்தில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வுக்கு கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமை தாங்கினார். கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு, போக்குவரத்து அமைச்சுடன் இணைந்து இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றது.

முதற்கட்டமாக வட மாகாணத்திற்குள் 20 ‘சிசு செரிய’ பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில், வவுனியா மாவட்டத்தின் பயன்பாட்டுக்காக இரண்டு புதிய பேருந்துகள் நேற்று மாணவர்களிடம் கையளிக்கப்பட்டன. இந்தச் சேவையைப் பயன்படுத்தும் பாடசாலை மற்றும் பல்கலைக் கழக மாணவர்கள், ஆசிரியர்களிடமிருந்து சாதாரண பேருந்து கட்டணத்தில் பாதி (அரைக்கட்டணம்) மாத்திரமே அறவிடப்படும் என்பதுடன், எஞ்சிய பாதிக் கட்டணத்தை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ். திலகநாதன், எம். ஜெகதீஸ்வரன், வட மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் எஸ். விமலேஸ்வரன் உள்ளிட்ட அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி: 15.06.2026
தினம்: திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 0927
ஆங்கில எழுத்து: V
வெற்றி இலக்கம்: 0 | 4 | 7 | 4 | 0 | 3

**Super Ball**
திகதி: 15.06.2026
தினம்: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 3193
ஆங்கில எழுத்து: V
வெற்றி இலக்கம்: 17 | 31 | 53 | 57

**சனிதா**
திகதி: 15.06.2026
தினம்: திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து: B
வெற்றி இலக்கம்: 14 | 39 | 68 | 79
வெற்றி வாரம்: 5354

**SASIRI**
திகதி: 15.06.2026
தினம்: திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 1023
வெற்றி இலக்கம்: 06 | 32 | 34

**லக்ன ராசி**
திகதி: 15.06.2026
தினம்: திங்கட்கிழமை
விருச்சிகம்
வெற்றி இலக்கம்: 07 | 15 | 23 | 60
சீட்டிழுப்பு வாரம்: 4905

**KAPRUKA**
திகதி: 15.06.2026
தினம்: திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து: M
சுப்பர் இலக்கம்: 23
வெற்றி இலக்கம்: 07 | 61 | 70 | 72
வெற்றி வாரம்: 2369

**அத கோடிபதி**
திகதி: 15.06.2026
தினம்: திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து: N
வெற்றி இலக்கம்: 21 | 25 | 43 | 75
வெற்றி வாரம்: 3019


## இந்த வாரத்தில் டெங்கு ஒழிப்பு

**கொழும்பு, ஜூன் 16**

டெங்கைக் கட்டுப்படுத்துவதற்காக, இந்த வாரம், டெங்கு ஒழிப்பு வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இது எதிர்வரும் 20ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும். இன்றும், நாளையும் நகரங்கள், வடிகால் அமைப்புகள், வணிக வளாகங்கள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பேருந்து நிலையங்கள் உள்ளிட்ட பொது இடங்கள் சுத்தம் செய்யப்படவுள்ளன.

தொடர்ந்து 18ஆம் திகதி பாடசாலைகள், முன்பள்ளிகள் மற்றும் தனியார் மேலதிக வகுப்புகள் உள்ளிட்ட அனைத்து கல்வி நிறுவனங்களும், அவற்றின் சுற்றுப்புற வளாகங்களும் சுத்தம் செய்யப்படும். தொடர்ந்து எதிர்வரும் 19ஆம் திகதி அனைத்து அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலை வளாகங்களும் சுத்தம் செய்யப்படும்.

எதிர்வரும் 20ஆம் திகதி வீடுகள் மற்றும் வீடுகளைச் சுற்றியுள்ள வளாகங்களைச் சுத்தம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (சு-இ)




## ரயில்வே திணைக்களத்தின் இணையத்தளம் முடக்கம்!

**கொழும்பு, ஜூன் 16**

ரயில்வே திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மீது, நேற்றுமுன்தினம் இணையவழி சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தத்தாக்குதல் தொடர்பான தகவலை திணைக்களம் அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலால், இணையத்தளத்தின் சில சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, ரயில்களின் நேர அட்டவணை மற்றும் பயண விபரங்களை பொதுமக்கள் பார்வையிடும் பகுதி தற்போது செயலிழந்துள்ளது. எனினும் இணையத்தளத்தை மீண்டும் வழமைக்குக் கொண்டுவரும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று திணைக்களம் தெரிவித்துள்ளது. (சு-இ)



## வடதாரகை மீண்டும் சேவையில்!

**யாழ்ப்பாணம், ஜூன் 16**

பழுதுபார்க்கப்பட்ட வடதாரகைப் படகு, நெடுந்தீவு -குறிகாட்டுவான் இடையே நேற்றுத் திங்கட்கிழமை முதல் மீண்டும் மக்கள் பாவனைக்காகச் சேவையில் இணைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை நெடுந்தாரகைப்படகு தற்போது காங்கேசன்துறை துறைமுகத்தில் திருத்தப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அதன் பணிகள் நிறைவடைந்தவுடன், குறித்த படகும் விரைவில் மீண்டும் சேவையில் இணைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குமுதினிப்படகு இயந்திரக்கோளாறு காரணமாக சேவையிலிருந்து விலக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது அதன் இயந்திர திருத்தப்பணிகளும் நடைபெற்று வருகின்றன. திருத்தப் பணிகள் நிறைவடைந்தவுடன் குமுதினிப் படகும் மக்களின் பயன்பாட்டுக்காக மீண்டும் சேவையில் இணைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயப் பராபவ வருடப் பெருவிழா நேற்றுத் திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அடியவர்களின் அரோகராக் கோஷங்கள் மற்றும் மங்கள வாத்திய முழக்கங்களுக்கு மத்தியில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. கொடியேற்றத் திருவிழாவில் ஆயிரக்கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்தும் பதினைந்து தினங்கள் பெருந்திருவிழா காலை, இரவுத் திருவிழாக்களாக இடம்பெறவுள்ளது. (எ-66-17)



# திரிபடைந்துள்ள டெங்கு வைரஸ்!

**கொழும்பு, ஜூன் 16**

**இலங்கையில் தற்போது பரவி வரும் டெங்கு வைரஸானது, கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் புதிய மரபணு மாற்றமடைந்த (திரிபு) ஒரு வைரஸ் என சுகாதார மற்றும் ஊடகத்துறை பிரதி அமைச்சர் ஹம்சக்க விஜேமுனி தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அவர், இதுவரை இலங்கையர்களுக்குத் தொற்றியிராத புதிய வகை திரிபு என்பதால், இதற்கு எதிராகப் பொதுமக்களின் உடலில் நோய் எதிர்ப்புச்சக்தி குறைவாக இருக்கும் என்றும், இதனால் மிக வேகமாகவும் பெருமளவிலும் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டினார். இந்த அசாதாரண சூழ்நிலையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் முழு வீச்சில் இறங்கியுள்ளது என்று குறிப்பிட்ட அவர், நுளம்புகள் பெருகும் இடங்களை அழித்தல் மற்றும் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் நிலைமை தீவிரமடையாமல் தடுத்துக் குணப்படுத்துதல் போன்ற திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவித்தார். அரசாங்கத்தின் இந்நடவடிக்கைகளுக்குப் பக்கபலமாக, பொதுமக்கள் தத்தமது சூழலைத் தூய்மையாகப் பேணி, நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என பிரதி அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார். (எ-இ)

# 'ரின்' இலக்கமின்றி 40 இலட்சம் பேர்


இலங்கையில் 18 வயது பூர்த்தியடைந்த அனைவருக்கும் 'ரின்' இலக்கம் கட்டாயமாக்கப்பட்டுள்ள நிலையில், இதுவரை சுமார் 40 இலட்சம் பேர் அதனைப் பெறவில்லை என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. மொத்தம் 17 மில்லியன் பேர் பதிவுசெய்ய வேண்டியுள்ள நிலையில், தற்போது 13 மில்லியனுக்கும் அதிகமானோர் இதனைப் பெற்றுள்ளனர். 2026ஆம் ஆண்டின் புதிய உள்நாட்டு இறைவரி திருத்தச்சட்டத்தின்படி, வங்கிக் கணக்கு திறப்பு, வாகனப் பதிவு, வணிகப்பதிவு, கடன் அட்டை (Credit Card) பெறுதல் மற்றும் பங்குப் பரிமாற்றம் உள்ளிட்ட பல்வேறு பொதுவான நடவடிக்கைகளுக்கு இனி 'ரின்' இலக்கம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் 'ரின்' இலக்கமானது இரகசியத் தகவலாகக் கருதப்படமாட்டாது என்றும் அந்தத் திணைக்களம் மேலும் தெளிவுபடுத்தியுள்ளது. (எ-இ)

## வாக்குமூலம் வழங்கிய விஜிதமுனி

கொழும்பு, ஜூன் 16

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் விஜித் விஜிதமுனி சொய்சா நேற்றுக் காலை நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவில் முன்னிலையானார். நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவால் முன்னெடுக்கப்படும் விசாரணை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காகவே அவர் சென்றிருந்தார். (எ-இ)

# வலுவடைந்தது ரூபா



கொழும்பு, ஜூன் 16

அமெரிக்க டொலருக்கு நிகராக வீழ்ச்சியடைந்து வந்த இலங்கை ரூபா நேற்று மீண்டும் வலுவடைந்துள்ளது என்று இலங்கை மத்தியவங்கி அறிவித்துள்ளது. நேற்று அமெரிக்க டொலரின் கொள்முதல்விலை 326.34 ரூபாவாகவும், அதன் விற்பனை விலை 336.58 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க டொலரின் கொள்முதல்விலை 331.42 ரூபாவாகவும், அதன் விற்பனை விலை 341.36 ரூபாவாகவும் காணப்பட்டிருந்தது. (எ-இ)




# ஏன் இழுபறி? –2

கிளிநொச்சிப் பாட்டுக்காரப் பெடியனைப் பிடிச்ச விசயம் இப்பிடிப் பெரிசாகுமெண்டு அரசாங்கம் கனவிலையும் நினைக்கேலை. எங்கையாவது கோஷ்டியளிலையும், ரிக்ரொக்கிலையும் பாடித் திரிஞ்ச பெடியனைப் பிடிச்சு உள்ளுக்க போட்டால் ஒரு பிரச்சினையுமில்லை எண்டுதான் திசைகாட்டிக்காரர் நினைச்சவை. ஈஸ்டர் தாக்குதலில சுரேஷ் சாலேயை பயங்கரவாதத்தடைச் சட்டத்தில உள்ளுக்க போட்டதால சிங்கள ஏரியாவில கடும் சலசலப்பு. அங்கத்தை பனங்காட்டு பேரினவாத நரியளான விமல், கம்மன்பில, வீரசேகர எண்டு கொஞ்சப்பேர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில சுரேஷ் சாலேயை உள்ளுக்க போட்டது பிழை எண்டு ஊளையிடத் தொடங்கிட்டினம். இப்பிடி அவை ஊளையிடுறது எடுபட்டால் பிறகு சிங்களச் சனம் தங்களை மதிக்காது எண்டு திசைகாட்டிக்காரருக்குப் பயம். அதால ஆரும் ஒரு தமிழரையும் உடனடியா பயங்கரவாதத்தடைச்சட்டத்தில பிடிச்சால் 'நாங்கள் பாரபட்சம் இல்லாமல் தான் சட்டத்தை நடைமுறைப் படுத்துறம்' எண்டு சனத்துக்கு சொல்லலாம் எண்டு பிளான் போட்டு, ஆர் பிடிபடுவினம் எண்டு ஓடுமீன் ஓடி உறுமீன் வரு மட்டும் திசைகாட்டிக்காரர் காத்திருந்தவை.

அப்பதான் பழம் நழுவிப் பாலில விழுந்தமாதிரி, கிளிநொச்சிப் பெடியன் இயக்கத்துக்கு சப்போர்ட்டா பாட்டுப் படிச்சவரெண்டு அவர் படிச்ச பாட்டுகளின்ர அர்த்தத்தை சிங்களத்தில மொழிபெயர்த்து தென்னிலங்கையில பரவத் தொடங்கிட்டுது. அப்பிடி அந்தப் பெடியன்ர தமிழ்ப்பாட்டை இப்பிடி வரிக்கு வரி சிங்களத்தில மொழிபெயர்த்து சோசியல் மீடியாக்களில போட்டுக்குடுத்தது உந்த ஊசிக்கார எம்.பி. எண்டும் ஒரு கதை உலாவுது. ஏனெண்டால் ஊசிக்கார எம்.பி.யை ஒரு பாட்டில கிளிநொச்சிப் பாட்டுக்காரப் பெடியன் கிழிச்சுத் தொங்க விட்டவர். அதுக்குப் பழிவாங்கத்தான் ஊசிக்கார எம்.பி. இப்பிடியொரு எளிய வேலையைச் செய்தவர் எண்டும் கனபேர் சொல்லுகினம். இந்த விசயம் உடனேயே 'இப்பிடி தடைசெய்யப்பட்ட இயக்கத்தை உருவாக்க நினைச்சுப் பாடுறவனைப் பிடிக்காமல் நாட்டுக்காக போராடின சுரேஷ் சாலேயைப் பிடிக்கினம்' எண்டு சிங்கள சோசியல் மீடியாக்களில ஒரு கதை புகையத் தொடங்கிட்டுது. இதுக்குத்தான் வெய்ட் பண்ணிக்கொண்டிருந்த மாதிரி கிளிநொச்சிப் பாட்டுக்காரப் பெடியனை பயங்கரவாதத் தடைச்சட்டத்தில அரஸ்ட் பண்ணிப் போட்டினம். அதால 'பாத்தியளே புலியளுக்கு சப்போர்ட் பண்ணிப் பாட்டுப்படிச்சவரையும் சுரேஷ் சாலே மாதிரி பயங்கரவாதத் தடைச் சட்டத்திலதான் பிடிச்சிட்டம்' எண்டு சொல்லி, சாலேயின்ர பிரச்சினையை 'பலன்ஸ்' பண்ண திசை காட்டிக்காரர் நினைச்சவை.

ஆனால் நினைச்சதெல்லாம் நடக்காது தானே. சிங்களச் சனம் இந்தக் கைதோட கொஞ்சம் அமத்தி வாசிக்கத் தொடங்கினாலும், 'இப்பிடிப் பாட்டுக்காரப் பெடியனைப் பிடிச்சது கருத்துச் சுதந்திரத்தை நசுக்கிற வேலை' எண்டு எல்லாப் பக்கமும் எதிர்ப்பு வரத்தொடங்கிட்டுது. போதாக்குறைக்கு ஐ.எம்.எப்.காரரும் 'இப்பிடியான வேலையளைச் செய்து கெட்டபேர் வாங்கினால் கடனெல்லாம் சரிவராமல் போடும்' எண்டு பயங்காட்டத்தான் வேற வழியில்லாமல், கிளிநொச்சிப் பெடியனை விடுவம் எண்டு அரசாங்கம் நினைச்சுது. அதுக்காகத்தான் நாலைஞ்சு நாளைக்கு முதல் யாழ்ப்பாணத்தில இருக்கிற பொலிஸில பெரியவையை கொழும்புக்குக் கூப்பிட்டு 'சனத்தின்ர மனநிலை என்ன?' எண்டு கேட்டறிஞ்சவை. 'பெடியனை விடாட்டி சிக்கல் தான்' எண்டு சொல்லி இருக்கினம், கிளிநொச்சிப் பெடியனை உடன விடுகிறதில இருக்கிற சிக்கலே பயங்கரவாதத் தடைச்சட்டத்தில பிடிச்சது தான். உந்தச் சட்டத்தில பிடிச்சா பிணையில லேசில விடமுடியாது. சட்டமா அதிபர் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்த பிறகுதான் பிணைக்கு அப்ளை பண்ணலாம். அப்ப உடன விடுகிறதெண்டால் வேற சட்டத்தின் கீழ தான் கிளிநொச்சிப் பெடியனை பிடிச்சதெண்டு மாத்தச் சொல்லி மேல்மட்டம் பொலிஸுக்கும், சட்டமா அதிபருக்கும் ஓர்டர் போட்டதாம். பிறகு என்ன நடந்ததெண்டு நாளைக்குப் பாப்பம்.

padsi@uthayan.com
– பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாடசாலைக் கட்டுமானத்தை முழுமைப்படுத்தக் கோரிக்கை!

முல்லைத்தீவு, ஜூன் 16

முள்ளியவளை கலைமகள் வித்தியா லயத்தில் நீண்டகாலமாக கட்டிமுடிக்கப்படாமல், பாதுகாப்பற்றுள்ள வகுப்பறைக் கட்டடத்தை, முழுமைப்படுத்துமாறு நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கோரிக்கை விடுத்துள்ளார். முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார். இந்தக் கட்டடம் உடைந்து விழும் அபாயத்திலுள்ளது. இதற்குள்ளேயே மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளைத் தொடர்கின்றனர். எனவே மாணவர்களின் பாதுகாப்பில் கரிசனை கொண்டு வகுப்பறைக்கட்டடத்தைச் சீர்செய்வதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். இதற்குப் பதிலளித்த வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வை.ஜெயச்சந்திரன், இந்த வகுப்பறைக் கட்டட வேலையை முன்னெடுத்த ஒப்பந்ததாரருடைய ஒப்பந்தத்தை முறையாக நீக்கிவிட்டு, எம்மிடம் அந்தப் பொறுப்பை வழங்கியிருந்தால், எம்மால் மீளவும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, வேலைகளை ஆரம்பித்திருக்க முடியும். இந்திய அரசாங்கத்துக்கும் நிரல் அமைச்சுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்டு, வடமாகாணத்தில் 4 பாடசாலைகளில் இவ்வாறான கட்டடங்கள் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த வேலைத்திட்டம் தொடர்பான கோப்புக்கள் எவையும் எம்மிடம் இல்லை. இதற்கு எமது மாகாணக் கல்வித் திணைக்களம் பொறுப்பேற்க முடியாது -என்றார். வடக்கு மாகண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன் தெரிவிக்கையில், இந்தக் கட்டடம் அமைக்கும் விடயத்தில் இலங்கை அரசும், இந்திய அரசும் கைச்சாத்திட்டுள்ளது. தொடர்ந்து நிரல் அமைச்சால் நேரடியாக இந்த வேலைக்கான ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. வேலைத்திட்டம் தொடர்பான முறையான ஆவணங்களும் இல்லை. ஒப்பந்த வேலையைப் பெற்றவர்களே வகுப்பறைக் கட்டடத்தை முழுமைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (க-246)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

கோவிலாக்கண்டி கைதடி வேலம்பிராய் கண்ணகை அம்மன் ஆலய அருள் மிகு சிவகாமி அம்மன் தேவஸ்தானத்தின்மஹோற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறும். 18ஆம் திகதி வியாழக்கிழமை மஞ்சத்திரு விழாவும், 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழாவும், 20ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும், 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும், 22ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும், 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூங்காவனத் திருவிழாவும், 24ஆம் திகதி புதன்கிழமை வைரவர் மடையும் இடம் பெறவுள்ளது. (எ-41-159)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 16

சைவ வாழ்வியலில் திருமந்திரம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வாராந்தத் திருமந்திரச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர்-10 எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு பன்னாலை திருவருள்மிகு சிவபூதவராயர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. சிவநெறிப்பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் நிகழ்வில் திருமூலநாயனார் குரு பூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், பிரசங்கபூஷணம், திருவாசகப்பிரியன் க. கைலநாதனின் 'குருவருளின்றித் திருவருள் இல்லை' எனும் பொருளில் சொற்பொழிவும் இடம்பெறும். சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

★★★★

யாழ்ப்பாணம், ஜூன் 16

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத்தொடரின் 57ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30மணிக்கு இடம்பெறவுள்ளது. சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள நிகழ்வில் கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்த குரு ஞானபானு, சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையும், பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனின் தலைமையுரையும், சைவப்புலவர், சொற்பெருவேந்தன் சி.கா.கமலநாதனின் 'இந்திரன் கயிலைசெல் படலம்' எனும் விடயப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவும் இடம்பெறும். சொற்பொழிவிலிருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

# உள்ளூராட்சி சபைகள் இணைந்து திண்மக்கழிவகற்றல் பொறிமுறை

**பரு. நகரசபைச் செயலாளர் அழைப்பு!**

யாழ்ப்பாணம், ஜூன் 16

வடமராட்சியில் நிரந்தர திண்மக்கழிவகற்றல் பொறிமுறையை உருவாக்க, அப்பிரதேசத்திலுள்ள 4 உள்ளூராட்சி சபைகளும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் ச.பிரசாத் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை நகரசபையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய அவர், "ஒவ்வொரு சபையும் ஒரு பிரிவைப் பொறுப்பேற்றால் இத்திட்டம் சாத்தியமாகும். கரவெட்டி பிரதேசசபையில் ஏற்கனவே உக்கும் கழிவுகளிலிருந்து பசளை தயாரிக்கும் திட்டம் உள்ளதால், ஏனைய சபைகள் தமது உக்கும் கழிவுகளை அங்கு அனுப்பலாம். வல்வெட்டித்துறை நகரசபைக் காணியில் பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளைச் சேகரித்து விற்பனை செய்யும் நிலையத்தை அமைக்கலாம்"-என்றார். இதற்கான கூட்டு ஒப்பந்தத்தை உருவாக்கி, சுகாதார அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் திட்டத்தை நடைமுறைப்படுத்த அவர் அழைப்பு விடுத்துள்ளார். (க100)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

நாவற்குழி மருதடி நெணியன்பதி நரசிங்க வைரவர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் நாளை புதன் கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பத்தாம் நாளான எதிர் வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை 108 சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது. (எ-41-159)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** இன்றுபுதிய முயற்சிகள் அனுகூலமாகும். கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும் வாய்ப்பு ஏற்படும். பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும்.

**இடபம்:** உற்சாகமான நாள். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையின் தேவைகளைப் பூர்த்திசெய்து மகிழ்ச்சி அடைவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாகமுடியும்.

**மிதுனம்:** இன்று தொடங்கும் புதிய முயற்சி சாதகமாகமுடியும். சிலருக்கு சகோதரவகையில் எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். வாழ்க்கைத் துணைவழி உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**கடகம்:** உற்சாகமான நாள். எதிர்பாராத பணவரவு உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். சிலருக்குக் குடும்பத்துடன் குலதெய்வக் கோயிலுக்குச் சென்று பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**சிம்மம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். முக்கியமான விஷயம் தொடர்பாக வாழ்க்கைத்துணையிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

**கன்னி:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணை உங்கள் தேவையறிந்து பண உதவி செய்வார்.

**துலாம்:** இன்று புதிய முயற்சியைத் தவிர்க்கவும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தடை, தாமதம் ஏற்படக்கூடும். சகோதரர்கள் உதவி கேட்டு நச்சரிப்பார்கள்.

**விருச்சிகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால், செலவுகளை சமாளித்துவிடுவீர்கள். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்கு வெளியூரில் இருக்கும் கோயில்களுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**தனுசு:** இன்று எதிலும் பொறுமையாக இருப்பது நல்லது. திடீர் செலவுகளால் கடன் வாங்க நேரிடும். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களை விட்டுப்பிடிப்பது நல்லது.

**மகரம்:** உற்சாகமான நாள். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்திசெய்வீர்கள்.

**கும்பம்:** எதிர்பாராத பணவரவு உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். உறவினர் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரவகையில் சுபச்செலவுகள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பும் சிலருக்கு ஏற்படக் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



உண்மை - நேர்மை - அஞ்சாமை

# இனியாவது விடுவியுங்கள்!

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு நிலப்பரப்பிலிருந்து தமிழ் மக்கள் ஆயுத முனையில் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு நேற்றுடன் 37 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. முள்ளிவாய்க்காலில் போர் மௌனித்து 17 ஆண்டுகள் கடந்தோடிவிட்ட நிலையிலும், தங்களின் சொந்த மண்ணில் காலடி வைக்க முடியாமல் அகதி முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தஞ்சம் புகுந்துள்ள மக்களின் அவலநிலை மாறவில்லை.'புதியதொரு விடியல் பிறக்கும், சட்டத்தின் ஆட்சி நிலைநிறுத்தப்படும்'என்ற வாக்குறுதிகளுடன் அரியணை ஏறிய தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும், முன்னைய ஆட்சியாளர்களைப் போலவே தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை விடுவிப்பதில் அப்பட்டமான அசமந்தப்போக்கையே காட்டி வருகின்றது. வாய் வார்த்தையில் மட்டுமே காணி விடுவிப்புப் பற்றிப் பேசும் இந்த அரசு, நடைமுறையில் எந்தவொரு உருப் படியான நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பதன் வெளிப்பாடுதான், நேற்று ஒரே நாளில் பலாலியிலும் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் முன்னாலும் மக்கள் நடத்திய போராட்டங்கள்.

'தேசிய பாதுகாப்பு' என்ற ஒற்றை வாசகத்தைக் கவசமாகப் பயன்படுத்திக் கொண்டு, வலி.வடக்கில் இன்னமும் சுமார் 2 ஆயிரத்து 300 ஏக்கர் பொதுமக்களின் பூர்வீகக் காணிகளை இராணுவம் தனது பிடிக்குள் வைத்துள்ளது. 2010, 2011ஆம் ஆண்டுகளில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர்கள் விடுவிக்கப்பட்டதாகக் கணக்குக் காட்டிய பாதுகாப்புத் தரப்பு, கடந்த பத்து ஆண்டுகளில் (2015-2025) நிலங்களை விடுவிப்பதில் காட்டிய சுணக்கம் வேதனையானது. கடந்த 2025ஆம் ஆண்டில் வெறும் 35 ஏக்கர் நிலம் மட்டுமே விடுவிக்கப்பட்டது என்பது பாதிக் கப்பட்ட மக்களின் காயங்களில் உப்பினை அப்புவதற்குச் சமமானதாகும். அதைவிடவும் கொடுமை என்னவென்றால், மக்களின் நிலங்களை அபகரித்து வைத்துள்ள இராணுவத்தினர், அங்கு தங்களின் வணிக சாம்ராஜ் யத்தை விரிவுபடுத்தி வருவதுதான். கட்டுவன், குரும்ப சிட்டி, மயிலிட்டி, பலாலி மற்றும் காங்கேசன்துறை ஆகிய பகுதிகளில் மக்களின் வளமான விவசாய நிலங்களைப் படையினர் ஆண்டு அனுபவித்து வரும் அதேவேளை, 'தல்செவன' விடுதி, மரக்கறிக்கடைகள், சோளம் விற் பனை, விமானப்படையினரின் ஹோட்டல் என இலாபம் ஈட்டுகின்றனர். சொந்த நிலத்தின் உரிமையாளன் அகதியாக அல்லல்பட, ஆக்கிரமிப்பாளர்கள் அங்கு சொகுசு வாழ்க்கை நடத்தும் இந்த அவலம் எந்தவகையான ஜனநாயகம்?

மக்களின் வாழ்வாதார நிலங்கள் மட்டுமன்றி, அவர்களின் கலாசார மற்றும் கல்வி அடையாளங்களும் சிதைக்கப்பட்டு வருகின்றன. மயிலிட்டி காணிக்கை மாதா தேவாலயம், மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலய விளையாட்டு மைதானம், வரலாற்றுச் சிறப்புமிக்க பல ஆலயங்கள் மற்றும் பாடசாலைகள் இன்னமும் இராணுவக் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. கே.கே.எஸ். துறைமுகம்-கீரிமலை வீதி, கட்டுவன் -வசாவிளான் வீதி உள்ளிட்ட முக்கியமான போக்குவரத்துப் பாதைகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. பலாலி படைத்தளத்திற்கு வெளியேயும் தல்செவன முகாம், 511ஆவது பிரிகேட் தலைமையகம் என 7 முகாம்கள் சிவில் நிர்வாகத்தை ஆக்கிரமித்துள்ளன. அரசாங்கம் ஒன்றை இப்போதாவது புரிந்துகொள்ளவேண்டும்; நிலம் என்பது தமிழர்களுக்கு வெறும் சொத்து அல்ல, அது அவர்களின் வாழ்வியல் உரிமை, பண்பாட்டு அடையாளம். சொந்த நிலத்தில் இராணுவத்தினரின் உதவியுடன் நிகழும் சட்டவிரோதக் கட்டுமானங்களைத் தடுத்து நிறுத்த அர்சாங்கம் தயங்குவது, அதன் 'மாற்றத்திற்கான' முகமூடியைக் கிழித்தெறிந்துள்ளது. வசாவிளான் மற்றும் உதயவாணி மக்கள் ஒன்றியத்தின் கீழ் அணிதிரண்ட மக்கள் எழுப்பியுள்ள நீதிக்கான குரல், ஆட்சியாளர்களின் மனசாட்சியைக் குத்திக் கிழிக்க வேண்டும். தேசிய பாதுகாப்பு என்பது மக்களின் நிலங்களைப் பறித்து ஹோட்டல் நடத்துவதில் இல்லை, மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில்தான் உள்ளது. எனவே, இனியும் சாக்குப்போக்குகளைச் சொல்லாமல், வலி.வடக்கு மக்களின் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை நிபந்தனையின்றி உடனடியாக விடுவித்து, அவர்கள் கௌரவமாக மீள்குடியேறுவதை உறுதி செய்வதே இந்த அரசாங்கத்திற்குச் சாலச்சிறந்தது. இல்லையேல், முந்தைய பேரினவாத அரசுகளின் வரிசையில் இந்தத் திசைகாட்டி அரசும் வரலாற்றின் கரும்புள்ளியாகவே பதியப்படும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## பொய்யாமொழி

**எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும் தேரான் பிறனில் புகல்**

**பொருள்:** தினையளவும் ஆராய்ந்து பார்க்காமல் பிறனுடைய மனைவியிடம் செல்லுதல், எவ்வளவு பெருமையை உடையவராயினும் என்னவாக முடியும்?




# தீவிரமடைகிறது டெங்குத்தொற்று



நாடு முழுவதும் விசேட களப்பரிசோதனை!

**கொழும்பு,ஜூன் 16**

**நாட்டில் தீவிரமடைந்து வரும் டெங்கைக் கட்டுப் படுத்தும் நோக்கில், விசேட டெங்கு ஒழிப்பு வாரம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், களப்பரிசோதனைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**

பொது நிர்வாக, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுகாதார மற்றும் ஊடக அமைச்சுக்கள், தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு மற்றும் பொலிஸாருடன் இணைந்து இந்த தேசிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 வருடங்களுடன் ஒப்பிடுகையில், வாராந்தம் பதிவாகும் நோயாளர்களின் எண்ணிக்கை தற்போது கணிசமாக அதிகரித்து வருகின்றது. இந்த நிலைமை காரணமாக நாளாந்தம் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கையும் வேகமாக உயர்வடைந்து வருகின்றது. இது தொடர்பில் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பிரதானி, சகுந்தலா ஜானகி தெரிவித்துள்ளதாவது-

இதுவரை மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனைகளில், பாடசாலைகள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்களில் நுளம்புகள் பெருகும் சூழல் அவதானிக்கப்பட்டுள்ளது. இதுவரை 28 ஆயிரத்து 913 நுளம்பு பெருகும் இடங்கள் கண்டறியப்பட்டுள்ளதுடன், அவற்றில் 26.7 சதவீதம் தூக்கி எறியப்பட்ட கழிவுப் பொருள்கள் மூலமும், 14.7 சதவீதம் தற்காலிகமாக அகற்றப்பட்ட பொருள்களின் மூலமும் நுளம்புகள் அதிகமாகப் பெருகும் இடங்களாகமாறியுள்ளன-என்றார்.(க-இ)

## மின்சாரம் தாக்கி பெண் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 16

சட்டவிரோதமாக மின்சார வேலி பொருத்தப்பட்டிருந்த காணிக்குள், தேங்காய் எடுப்பதற்குச் சென்ற பெண், மின்சாரத் தாக்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் குருநாகல் அலவ்வப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அலவ்வ நகருக்கு அருகில் நேற்று முன்தினம் நடந்துள்ளது.

உயிரிழந்தவர் அலவ்வப் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய பெண் என அடையாளம் காணப்பட்டுள்ளார். குறித்த காணியில் மரவள்ளித் தோட்டத்தை, காட்டு விலங்குகளிடமிருந்து பாதுகாப்பதற்காக, சட்டவிரோதமான முறையில் மின்சாரக் கம்பிகள் பொருத்தப்பட்டிருந்தன. அந்தக் காணியின் காவலாளி கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-இ)

# இந்திய மீனவர்களின் தடைக்காலம் நீக்கம்

இந்திய மீனவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த மீன்பிடித் தடைக் காலம் நேற்றுமுன்தினம் நள்ளிரவுடன் நிறைவடைந்துள்ள நிலையில், இராமநாதபுரம் மாவட்ட மீனவர்கள் தமது தொழில் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டிருந்த மீன்பிடித் தடைக்காலம் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் ஜூன் 14 ஆம் திகதி நள்ளிரவு வரை நடைமுறையிலிருந்தது. இந்தநிலையில் தடைக்காலம் நிறைவடைவதற்கு முன்னரே இந்திய மீனவர்கள் தொழில் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். இந்த நிலையில், சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபடும் விசைப்படகுகள் பறிமுதல் செய்யப்படும் என்று அந்த நாட்டு மீன்வளத் துறை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அதேவேளை கடந்த இரு மாதங்களாக இந்திய மீனவர்களின் அத்துமீறல் கட்டுப்பாட்டில் இருந்த நிலையில், கச்சதீவை நோக்கி இந்திய மீனவர்களின் வருகை இனி அதிகரிக்கும் என வடபகுதி மீனவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (க-இ)



# மீண்டும் எகிறும் தங்கத்தின் விலை

கொழும்பு, ஜூன்16


நாட்டில் தங்கம் விலை நேற்று சுமார் 6000 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. கொழும்பு செட்டியார் தெரு,தங்க விற்பனை நிலைவரப்படி, 24 கரட் தங்கம் ஒரு பவுண் 3 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாவுக்கும், 22 கரட் தங்கம் ஒரு பவுண் 3 இலட்சத்து 60 ஆயிரத்து 600 ரூபாவாகவுக்கும் விற்பனை செய்யப் படுகின்றது. (க-இ)

புதன்கிழமை- ஆனி 03
17.06.2026

சுபநேரம் : 04.23 – 05.53
ராகுகாலம் : 11.53 – 01.23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பஸில் ராஜபக்சவுக்கு எதிரான சாட்சியாக மாறினார் பாஸ்வர



**கொழும்பு, ஜூன் 16**
**2014ஆம் ஆண்டு ஊவா மாகாணசபைத் தேர்தலின் போது, சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்தின் 7.8 மில்லியன் ரூபா பொதுநிதியைப் பயன்படுத்தி அரசியல் ரீதியான ரீசேர்ட்கள் அச்சிட்ட வழக்கில், முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்சவுக்கு எதிராக அரச தரப்பு சாட்சியமாக மாற அந்தப் பணியகத்தின் முன்னாள் தலைவர் பாஸ்வர குணரத்ன உடன்பட்டுள்ளார்.**

குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் கீழ் அவர் வழங்கிய இரகசிய வாக்குமூலத்தையடுத்து, நீதிமன்றம் அவரை அரச சாட்சியாக ஏற்றுக்கொண்டதுடன், 1,00,000 ரூபா ரொக்கப் பிணையிலும், தலா 10 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் செல்ல நீதவான் பசன் அமரசேன உத்தரவிட்டார்.

இதேவேளை, இவ்வழக்கின் மற்றொரு சந்தேகநபரான பணியகத்தின் முன்னாள் முகாமைத்துவ பணிப்பாளர் ரூமி ஜவ் பரை நாளை வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. தற்போது வெளிநாட்டிலிருக்கும் பிரதான சந்தேகநபரான பஸில் ராஜபக்சவுக்கு எதிராக சர்வதேச அழைப்பாணை விடுப்பதற்கான சுயவிவர வாக்குமூலத்தை சமர்ப்பிக்குமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார். சந்தேகநபர்கள் அனைவரும் வெளிநாடு தப்பிச் செல்வதைத் தடுக்கும் வகையில் குடிவரவுத் திணைக்களத்தால் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், வழக்கின் அடுத்தகட்ட விசாரணை நாளை நடைபெறவுள்ளது. (எ-இ)

## ஊழலை ஒழிக்க வந்த அரசு நாட்டைத்தான் அழிக்கிறது

தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு

கண்டி, ஜூன் 16
ஊழலை ஒழிப்பதாகக் கூறி அதிகாரத்துக்கு வந்த அரசாங்கம், இப்போது ஒட்டுமொத்த நாட்டையும் அழித்துக் கொண்டிருக்கிறது என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். கண்டி இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்ற கூட்டு எதிரணிகளின் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். கொள்கலன் மற்றும் நிலக்கரி மோசடிகளின் நட்டத்தை மக்கள் சுமக்கின்றனர். ஐ.எம்.எப். உடன்படிக்கை முடிவடையும் போது, எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டணங்களை மேலும் அதிகரிக்க அரசாங்கம் தயாராகிறது. எமது நாட்டின் தரவுத்தொகுதி இந்தியாவிற்கு ஒப்படைக்கப்படவுள்ளது என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.
அங்கு உரையாற்றிய முன்னாள் அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ச தெரிவித்ததாவது இந்த அரசாங்கம் ஒரு முன்பள்ளி அரசாங்கம் போல் உள்ளது. இன்று நீதிமன்றம் கூட பலவீனப்பட்டு, சட்டத்தின் ஆதிக்கம் சீர்குலைந்து நாடு அராஜகமாகி வருகிறது. எனவே, நாட்டை ஜனநாயகக் கட்டமைப்புக்குள் கொண்டு வர அனைவரும் ஒன்றிணைய வேண்டும்-என்றார். (எ-இ)

## நாட்டை நல்வழிப்படுத்தும் சக்தி கூட்டு எதிரணிக்கே உள்ளதாம்!

அநுராத ஜயரத்ன எம்.பி. தெரிவிப்பு

கண்டி, ஜூலை 16
தவறான பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் நாட்டைச் சரியான வழிக்குக் கொண்டு செல்லும் சக்தி எமது கூட்டு எதிர்க்கட்சிக்கே உள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் அநுராத ஜயரத்ன தெரிவித்துள்ளார்.
கண்டி இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்ற கூட்டு எதிரணிகளின் கூட்டத்தில் உரையாற்றிய அவர், இந்த அரசாங்கத்திடம் எவ்வித திட்டமும் இல்லை. 'டித்வா' சூறாவளி அனர்த்தம் வரவுள்ளதை முன்கூட்டியே அறிந்திருந்தும், அதற்கான முகாமைத்துவ நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டனர் எனக் குற்றஞ்சாட்டினார். தினமும் காலையில் 15,000 மக்கள் புகையிரதம் இன்றி நடுவீதியில் தவிக்கின்றனர். நாவலப்பிட்டி, கம்பளை, கொத்மலை, எல்ல ஆகிய பிரதேசங்களுக்கான 6 புகையிரதங்கள் இயக்கப்படாமல் முடங்கியுள்ளன. இதனால் கண்டிக்கு வரும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். இவற்றை மீண்டும் இயக்குவதற்குக்கூட அரசாங்கத்தால் முடியாமல் போயுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

## சட்டத்தரணியைச் சந்திக்கும் தேவை சுரேஷ் சாலேவுக்கு தற்போதில்லை!

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 16
தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் காவலில் இருந்தபோது, உண்ணாவிரதப் போராட்டம் காரணமாக கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேவுக்கு, நாளாந்தம் சட்டத்தரணி உதவி வழங்குவதைக் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நிராகரித்துள்ளது.
வாரம் ஐந்து நாள்கள் சுரேஷ் சாலே தனது சட்டத்தரணி அசித சிறிவர்தனவைச் சந்திப்பதற்கு அனுமதி கோரி, அவரது மனைவி மனோரி சலே விடுத்த கோரிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில், சி.ஐ.டி பணிப்பாளர் ஷானி அபேசேகர எழுத்துபூர்வமாக இதனை அறிவித்துள்ளார்.
சுரேஷ் சாலே தற்போது விசாரணை நடவடிக்கைகளில் இருந்து விலகி, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதால் இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் சட்ட ஆலோசனைகளைப் பெறவேண்டிய அவசியம் எழவில்லை என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும், சட்டத்தரணியைத் தொடர்ச்சியாகச் சந்திப்பது அவரது மன அமைதியைக் கெடுத்து, சுகாதார நிலையைப் பாதிக்கலாம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
நீதிமன்ற உத்தரவின்படி ஏற்கனவே ஒவ்வொரு புதன்கிழமையும் மாத்திரம் சட்டத்தரணிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ள ஷானி அபேசேகர, சாலேவின் மனைவி, மகள் மற்றும் மகனுக்கு தினமும் அவரைப் பார்ப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதால், நாளாந்தம் சட்டத்தரணி சந்திப்பதற்கான கோரிக்கையை ஏற்க முடியாது எனத் திட்டவட்டமாக அறிவித்துள்ளார். (எ-இ)

## அமெ. – ஈரான் ஒப்பந்தத்துக்கு சஜித் பிரேமதாஸ வரவேற்பு

கொழும்பு, ஜூன் 16
அமெரிக்கா மற்றும் ஈரானுக்கு இடையே எட்டப்பட்டுள்ள உத்தியோகபூர்வ உடன்படிக்கையை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வரவேற்றுள்ளார். இதுகுறித்து அவர் தனது 'எக்ஸ்' தளத்தில், "பேச்சுவார்த்தை என்பது மனிதகுலத்தின் மிகப்பெரிய பலம் என்பதை இந்த உடன்படிக்கை மீண்டும் நினைவூட்டியுள்ளது.
பிளவுகளால் ஏற்படும் இழப்புகளையும், நல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தையும் இலங்கை நன்கு அறியும். அமைதி என்பது வெறும் யுத்தம் இல்லாத நிலை மட்டுமல்ல; அது நம்பிக்கை, கண்ணியம் மற்றும் பிள்ளைகளின் சிறந்த எதிர்காலத்திற்கான அடித்தளமாகும்" எனப் பதிவிட்டுள்ளார். ஈரானிய துறைமுகங்கள் மீதான முற்றுகையை நீக்குவது உள்ளிட்ட இணக்கப்பாடுகளுடன் உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்திருந்த நிலையில், சஜித் பிரேமதாஸ இந்த வரவேற்பை வெளியிட்டுள்ளார். (எ-இ)

## கணக்காய்வாளர் திணைக்களத்தின் விரிவாக்கத்துக்கு 7 புதிய பிரிவுகள்

கொழும்பு, ஜூன் 16
கணக்காய்வாளர் திணைக்களத்தின் செயற்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்காக, புதிதாக ஏழு பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
கொள்முதல் தணிக்கை, சிறப்பு விசாரணை அறிக்கைகள், சுற்றுச்சூழல் தணிக்கை மற்றும் செயற்றிறன் தணிக்கை உள்ளிட்ட பிரிவுகள் இதில் அடங்கும் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்தப் புதிய பிரிவுகளின் மூலம், தற்போது பொதுவான தணிக்கைச் செயல்முறையின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள், அந்தந்த தணிக்கைப் பிரிவுகளுக்கு நேரடியாக ஒதுக்கப்படும்.
அதனால் தணிக்கைச் செயற்பாடுகளை மிகவும் திறமையாகவும், பயனுள்ளதாகவும் முன்னெடுக்க முடியும் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.
அதேவேளை கணக்காய்வாளர் திணைக்களத்தில் தற்போது நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக, 250 புதிய அதிகாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தேசிய தணிக்கை ஆணைக்குழுவால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (க-இ)



## வீதியைக் கடந்தவர் விபத்தில் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 16
வீதியைக் கடக்க முயன்ற முதியவர், மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு உயிரிழந்தார். இந்த விபத்து ஹொரணைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹொரணை வவுலகல வீதியின் மூணகம சந்திக்கு அருகில் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது.
உயிரிழந்தவர் நாகொட, போம்புவல பகுதியைச் சேர்ந்த 73 வயதுடைய முதியவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.
விபத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மரண அறிவித்தல்

மலர்வு
28 . 09 . 1953



உதிர்வு
13 . 06 . 2026

## திரு. கதிர்காமத்தம்பி ஆனந்தராஜா

(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர்)

யாழ் கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமத்தம்பி ஆனந்தராஜா அவர்கள் கடந்த 13.06.2026 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமத்தம்பி - சிவக்கொழுந்து தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற சாந்தமலர் அவர்களின் அன்புக் கணவரும் அனுஷியா, சுதர்சனன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சேயோன், கவிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் சாதனா, ஏகன், அயன், ரேனா, அமீரா, அமிலிஜா, அரிஜானா ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் ஆனந்தமலர், தேவராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளைமறுதினம் (18.06.2026) வியாழக்கிழமை காலை 08.00 மணிமுதல் அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு மு.ப 10.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
சுதர்சனன் (மகன்) - +614 255 55574 (whatsapp)
சஞ்சீவன் (மைத்துனர்) - 077 725 0864

(CS/31991) J-1

# ஈரவிழிகளுடன் மூன்றாண்டு நினைவஞ்சலிகள்

மலர்வு
30 . 11 . 2000



உதிர்வு
16 . 06 . 2023

## அமரர் அபிநயன் விக்னேஸ்வரன்

(3ம் வருட பொறியியல் பீட மாணவன் -
ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்)

அபி உன் துள்ளிக்குதித்த கால்கள்
வாழ்நாள் வேலை நிறுத்தம் செய்ததேனோ!
புகழ்மிக்க நாணயமொன்று தன்னை
பூசிக்க வைத்துச் சென்றதேனோ!
நீங்காத இனிய நினைவுகளுடனும்
கனத்த மனதுடனும் வாழும் நாம் !


நாரந்தனை கிழக்கு,
ஊர்காவற்துறை.

(CS/61632) J-1

குடும்பத்தினர்

# 16ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு

தோற்றம்
04 . 11 . 1934



மறைவு
04 . 06 . 2026

கடந்த 04.06.2026 வியாழக்கிழமை அன்று
இறைவனடி சேர்ந்த எமது அன்பு தந்தை

## அமரர் ஆசாரி சின்னத்தம்பி சின்னையா

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் எதிர்வரும் (19.06.2026) வெள்ளிக்கிழமை காலை 08.00 மணியளவில் புங்குடுதீவு கண்ணகி அம்மன் புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் (23.06.2026) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

4ம் வட்டாரம்,
புங்குடுதீவு.

குடும்பத்தினர்
077 564 1222

(CS/61670) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
20 . 12 . 1943



மறைவு
14 . 06 . 2026

## ஸ்ரீசண்முகன் அன்னபாக்கியம்

ராஜ வீதி, தோப்பு, அச்சுவேலியினை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீசண்முகன் அன்னபாக்கியம் அவர்கள் கடந்த (14.06.2026) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - அன்னபூரணம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை ஸ்ரீசண்முகத்தின் அன்பு மனைவியும், மலர்விழி (ஆய்வுகூட உதவியாளர் - புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி), ஸ்ரீவிமலகாந்தன் (கணக்காளர் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம், சமூக சேவைகள் திணைக்களம்), கோகுலன் (உதவிப் பிரதிப் பணிப்பாளர், வடமாகாணம், இலங்கை சட்டஉதவி ஆணைக்குழு) ஆகியோரின் அன்புத் தாயும், சத்தீஸ்வரன் (ஓய்வுநிலை - பாடசாலை பணியாளர்), ஜெயஸ்ரீ (ஆசிரியை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), தேனுகா (சிரேஷ்ட முகாமையாளர், இலங்கை வங்கி, பம்பலப்பிட்டியா) ஆகியோரின் மாமியாரும், பிரவீனன் (விஞ்ஞான பீடம் - யாழ்ப்பாணம்), ஜனனி (சித்த மருத்துவபீடம் - திருகோணமலை), சஞ்ஜயன் (பொறியியல்பீடம் - மொறட்டுவ), டேரிகா (மருத்துவபீடம் - கொழும்பு), தீனசரண் (தகவல் தொழில்நுட்ப பல்கலைக்கழகம், மாலபே) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான Dr.இராசலிங்கம், தருமலிங்கம், ரட்ணலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சகாதேவன், மற்றும் விஜியலட்சுமி (லண்டன்) விஜியராகவன் (லண்டன்), ஜெகதாம்பாள் (அவுஸ்ரேலியா), காலஞ்சென்றவர்களான ஜவாகர், ராஜகோபால் மற்றும் மாலினி (லண்டன்), காலஞ்சென்ற விமலேந்திரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2026) செவ்வாய்க்கிழமை ராஜ வீதி, தோப்பு, அச்சுவேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.30 மணியளவில் தோப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
ராஜ வீதி, தோப்பு, அச்சுவேலி.
மகன் - 077 285 6425
மகன் - 077 729 4322

(CS/61672) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 25 . 05 . 1960

மறைவு 18 . 05 . 2026

கடந்த 18.05.2026 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குலவிளக்கு

## அமரர் ஞானபாலசிங்கம் சந்திராதேவி

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (17.06.2026) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு.

(CS/61663) J-1

குடும்பத்தினர்

# கண்டாவளை பிரதேசத்தில் காணி நடமாடும் சேவை



கிளிநொச்சி, ஜூன் 16

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் பொதுமக்களுக்குப் பெரும் சுமையாகநிலவிவந்தகாணிப் பிணக்கு களைத் தீர்ப்பதற்கான விசேட காணி நடமாடும் சேவை கண்டாவளைப் பிரதேச செயலகத்தின் பிரதான மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்த விசேட நடமாடும் சேவையின் போது, பலவருடங்களாகத்தீர்க்கப்படாது நிலுவையில் இருந்த சிக்கலான பல காணிப் பிணக்குகள் மற்றும் எல்லைப் பிரச்சினைகள் முறைப்படி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

மக்களின் முன்னிலையிலேயே சம்பந்தப்பட்ட அசல் ஆவணங்கள் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டு, சட்ட விதிகளுக்கு அமைவாக அவற்றுக்கான உரிய மற்றும் நீதியான தீர்வுகள் உடனுக்குடன் வழங்கப்பட்டன.

(ச)

**வேலையாட்கள் தேவை**

மேசன், கூலியாட்கள் தேவை.

தொடர்பு:- 077 605 7480

**காணி விற்பனைக்கு**

கந்தரோடை பகுதியில் சுன்னாகம் அளவெட்டி பிரதான வீதியிலிருந்து 100m தூரத்தில் காணி 2 பரப்புத் துண்டுகளாக பிரித்த நிலையில் விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு:-
076 105 6343, 071 705 6343

(CS/61668) J-1

# நினைவலைகள்

## 10ஆம் ஆண்டு நினைவலைகளும்



மண்ணில் 12 . 04 . 1959

விண்ணில் 25 . 01 . 2016

### நற்குணராசா சாந்தகுமாரி

பாரிலிருந்து அகன்று பத்தாண்டும் ஆயிற்றோ
நெஞ்சகத்து நிறைந்த நும் நினைவுகளோ
உயிருள்ளவரை அகலாது நிலைக்குமன்றோ
மக்கள் மூவரை பயந்து அதனால் மகிழ்கொண்டு
பாலூட்டி சீராட்டி நற்கதைகள் பல உரைத்து

அறிவொளி பெருக்கி பண்பினைப் புகட்டி
மேதினியில் மேம்படச் செய்திட்ட அன்னாய்
எம்முயர்வு கண்டு களித்திடலன்றி
விண்ணகம் புகுந்ததும் முறையோ சொல்வீர்

கண்ணான எம் தம்பியினை துணையாகக் கொண்டு
துயமொழித்து வரமும் எண்ணமும் கொண்டீரோ
அன்பின் வடிவமாக எங்கள் அன்னையே
உங்கள் ஆத்மா அமைதி கொள்ளட்டும்

## 3ஆம் ஆண்டு நினைவலைகளும்



மண்ணில் 21 . 11 . 2001

விண்ணில் 16 . 06 . 2023

### நற்குணராசா குகதீஸ்

(பொறியியற் பீட மாணவன் - பேராதனை பல்கலைக்கழகம்)

ஆண்டுகள் மூன்று அவசரமாக கடந்தாலும்
ஆறவில்லையடா உன் நினைவு
கடைக்குட்டியாக வந்துதித்தவனே
கடைசிவரை எம்முடன் இருப்பாய் என்றிருக்க

கடுகதியாய் சென்றதேனோ
காலங்கள் ஓடினாலும் காயங்கள் மட்டும் ஆறவில்லை
உன் இழப்பின் வேதனை ஒலி
எம் இதயங்களை விட்டு நீங்கவில்லை

பொறியியற் பீடத்திற்கு சென்ற நீ
பொறியியலாளராக வருவாய் என எண்ணியிருக்க
காலம் உள்ளவரை எம் கண்களிலே
வாழ்ந்து கொண்டிருப்பாய்

கண்ணான குகதீஸா சென்று வா எம் அம்மாவிடம்
நீ மறைந்தாலும் உன் நினைவுகள்
மறுஜென்மம் வரை நீடித்திருக்கும்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுடன் இணைந்து பயணித்தாலே குற்றங்களைக் கட்டுப்படுத்த முடியும்

## பொலிஸாருக்கு ஆளுநர் அறிவுரை!

யாழ்ப்பாணம், ஜூன் 16

**பொலிஸார் மக்களின் நம்பிக்கையை வெல்லும்வகையில் செயலாற்றுவதுடன், அவர்களுடன் இணைந்து பயணிக்கும்போதே குற்றங்களை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.**

கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கான புதிய கட்டடம் உத்தியோகபூர்வமாகத் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது. அந்த நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது கடந்த காலங்களில் பொலிஸார் தொடர்பில் பொதுமக்களிடமிருந்து அதிகளவான முறைப்பாடுகள் வெளிவந்துள்ளன. பொலிஸ் நிலையங்களில் மக்களின் முறைப்பாடுகள் ஏற்கப்படுவதில்லை, குற்றவாளிகளுடன் பொலிஸார் நட்பாகப் பழகுகின்றனர் என்றும் மக்கள் முறையிட்டுள்ளனர்.

இன்று அந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் வழங்கிவரும் உறுதியான தலைமைத்துவமே இந்த மாற்றத்துக்குக் காரணமாகும். வடக்கு மாகாணத்தில், குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் அதிகரித்திருந்த வாள்வெட்டு உள்ளிட்ட வன்முறைக் கலாசாரம் இன்று ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. சட்டவிரோதச் செயற்பாடுகளின் பின்னால், இன்றைய அரசாங்கம் ஒருபோதும் நிற்காது. இத்தகைய குற்றங்களை ஒழிப்பதற்குப் பொதுமக்களாகிய நீங்களும், பொலிஸாருக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும்-என்றார். (க-26)

# போதைப்பொருளுடன் சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 16

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கடந்த சில நாள்களாக கால்நடைத் திருட்டு மற்றும் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த மூன்று சந்தேகநபர்களை ஊர்காவற்றுறைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸ் உபபரிசோதகர் வினோத் தலைமையிலான குழுவினர் நடத்திய தீவிர ரோந்துப் பணியின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சாட்டிப் பகுதியில் வைத்து 2.350 மில்லிகிராம் ஹெரோய்னுடன் கைதுசெய்யப்பட்ட திருகோணமலையைச் சேர்ந்த நபர், ஏற்கனவே நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையிலுள்ள ஒரு கால்நடைத் திருடன் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை, பருத்தி அடைப்புப் பகுதியில் 2.250 மில்லிகிராம் ஹெரோய்னுடன் மற்றொரு நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். வேலணை சரஸ்வதி வித்தியாலயத்திற்கு முன்பாக 2.300 மில்லிகிராம் ஹெரோய்னை விற்பனைக்காக யாழ்ப்பாணம் கடத்த முயன்ற 29 வயதுடைய இளைஞர் ஒருவரும் பொலிஸாரிடம் சிக்கியுள்ளார். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவரையும் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் மேல்நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-23)



# சட்டவிரோதமாக மண் அகழ்வு அச்சுவேலியில் நால்வர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 16

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒட்டகப்புலம், வசாவிளான் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு சட்டவிரோதமான முறையில் செம்பாட்டு மண் அகழ்வில் ஈடுபட்டிருந்த நான்கு சந்தேகநபர்களை அச்சுவேலிப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். அவர்களிடமிருந்து மண் அகழ்வதற்குப் பயன்படுத்தப்பட்ட ஜேசிபி மற்றும் டிப்பர் வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இப்பகுதியில் நீண்டகாலமாக இரகசியமான முறையில் இரவு வேளைகளில் மண்ணகழ்வு நடைபெற்று வருவதாகவும், சில மாதங்களுக்கு முன்னரும் இவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்ததாகவும் பிரதேசவாசிகள் தெரிவித்தனர். கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, அச்சுவேலி பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் சதீஷ் தலைமையிலான குழுவினர் சம்பவ இடத்துக்குச் சென்று சந்தேகநபர்களைக் கைதுசெய்ததுடன், வாகனங்களையும் கைப்பற்றியுள்ளனர். சந்தேகநபர்கள் மல்லாம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு நாளைவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (எ-23)

# விளையாட்டு விழா

கிளிநொச்சி, ஜூன் 16

பளை இந்திராபுரம் பேர்ள் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக முகமாலை றோ. க. த. க. பாடசாலை ஆசிரியர் செ. கபிரியேற்பிள்ளை, சிறப்பு விருந்தினர்களாக பிரிவு கிராம அலுவலர் க. பிரபாகரன், பிரிவு சமூக வலுவூட்டல் அலுவலர் க. காண்டீபன், பிரிவு சமுர்த்தி அலுவலர் திருமதி சி. தர்மினி ஆகியோர் கலந்து கொள்வர். (க-9)


# கின்னஸில் இடம்பிடித்த நாட்டியக் கலைஞர்கள்

கொழும்பு,ஜூன் 16

இலங்கையின் கலை வரலாற்றில், 5,000க்கும் மேற்பட்ட பரதநாட்டியக் கலைஞர்கள் கொழும்பு காலிமுகத்திடலில் நேற்று ஒன்றுகூடி, பிரம்மாண்ட உலக சாதனையைப் படைத்துள்ளனர்.

இந்தியாவின் 'சங்கமம் குளோபல் அகடமி' மற்றும் இலங்கையின் 'சங்கமிழ் லியா ஹொலிடேஸ்' ஆகிய நிறுவனங்கள் இணைந்து, இந்தக் கின்னஸ் உலக சாதனை முயற்சியை அரங்கேற்றியுள்ளன. உலகின் மிகப்பெரிய பரதநாட்டியப் பயிற்சிக்கான கின்னஸ் சாதனையாக இது அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் இந்தியாவின் நாலாபுறங்களிலிருந்தும் வருகை தந்த 5,000க்கும் மேற்பட்ட நடனக் கலைஞர்கள் ஒரே மாதிரியான பாரம்பரிய உடைகளுடன், காலி முகத்திடலை ஒரு பிரம்மாண்ட கலைக் கடலாக மாற்றினர். கின்னஸ் உலக சாதனை அமைப்பின் கடுமையான விதிமுறைகளுக்கு இணங்க, உத்தியோகபூர்வ கண்காணிப்பாளர்கள் முன்னிலையில் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு அரங்கேற்றப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான கைகள் ஒரே முத்திரையைக் காட்டி, ஒரே தாளத்துக்கு ஆடிய காட்சி பார்ப்பவர்களை அடியோடு உறைந்து போகச் செய்துள்ளது. சங்கமம்2026 என்ற பெயரில் நடத்தப்பட்ட இந்த நிகழ்வு, இந்திய, இலங்கை நாடுகளுக்கு இடையிலான கலை மற்றும் கலாசார உறவை நீடித்துள்ளது. (க)





# உலக சாதனை மேடையில் தீவக மாணவிகள் இணைவு

யாழ்ப்பாணம், ஜூன் 16

காலிமுகத்திடலில், பரதநாட்டிய கலைஞர்கள் 5000க்கும் மேற்பட்டோர் ஒரே மேடையில் நடனமாடி உலக சாதனை படைத்த நிகழ்வில், தீவக மாணவிகள் 19 பேர் பங்குபற்றியுள்ளனர். நெடுந்தீவைச் சேர்ந்த 7 மாணவிகளும், வேலணை மற்றும் புங்குடுதீவைச் சேர்ந்த 12 மாணவிகளும் இவ்வாறு இணைந்திருந்தனர். நெடுந்தீவு கலைக்கோவில் நுண்கலைக் கல்லூரி ஆசிரியை மேகலா செல்வகுமாரின் நெறிப்படுத்தலில், குறித்த மாணவிகள் 19 பேரும் சாதனை நிகழ்வில் பங்குபற்றியுள்ளனர். (க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நிர்வாகத்...

தமிழரசுக் கட்சியின் அனைத்து மத்திய குழு உறுப்பினர்களுக்கும் அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்த விடயத்தை அவர் குறிப்பிட்டுள்ளார்.
இது தொடர்பில் அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் உள்ளதாவது:-
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்டக்கிளையின் புதிய நிருவாகத் தெரிவுக் கூட்டம் கடந்த மே மாதம் 31ஆம் திகதி இடம்பெற்றது. தெரிவுக்கு முன்னர் சில விடயங்களைத் தெளிவுபடுத்துவதற்காக நான் எழுந்த போது கட்சியின் பதில் தலைவரும் பதில் செயலாளரும் கதைக்க முடியாது என கடுந்தொனியில் கூறினார்கள். தெரிவு முடிந்ததன் பின்னர் கூறுமாறு பதில் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் கூறினார். நான் அதற்கு, 'தெரிவு முடிந்ததன் பின்னர் கூறி பிரயோசனம் இல்லை' எனக் கூறினேன்.
நான் கூட்டத்தில் எழுந்து கூறமுற்பட்ட விடயங்கள் என்னவெனில்,
2025ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதியன்று மாவிட்டபுரத்தில், இயங்கு நிலையிலிருக்கும் மாவட்டக் கிளைத் தலைவருக்கும் செயலாளருக்கும் தெரியாமல் தமிழரசுக் கட்சியின் காங்கேசன்துறைத் தொகுதிக் கிளைக்கான தெரிவுக் கூட்டம் கட்சியின் பதில் தலைவர், பதில் செயலாளர் முன்னிலையில் நடைபெற்றது. இந்தத் தெரிவு யாப்பு விதிகளுக்கு முரணானது ஆகும். கடந்த ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி வட்டுக்கோட்டை தொகுதிக்கிளைப் புனரமைப்பு மேற்கொள்ளப்பட்டது. இந்தத் தொகுதியிலும் மூலக்கிளையில் உள்ள உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படவில்லை.
திருகோணமலையில் நடைபெற்ற கட்சி தலைவர் தெரிவுக்கு மானிப்பாய் தொகுதிக்கிளையானது வலிகாமம் தெற்கு, வலிகாமம் தென்மேற்கு என இரண்டு பிரதேச கிளைகளாக வகுக்கப்பட்டு இரண்டு தொகுதிகளிலும் தலா 5 பேர் என மொத்தம் 10 பேர் மாவட்ட கிளைக்கும் அதன் ஊடாக பொதுச்சபைக்கும் உள்வாங்கப்பட்டார்கள். எனினும், இந்தக் கூட்டத்துக்கு (யாழ்ப்பாண மாவட்ட கிளைக் கூட்டத்துக்கு) மானிப்பாய் தொகுதி என்னும் பெயரில் 5 பேர் மாத்திரம் அழைக்கப்பட்டிருந்தார்கள். எந்த அடிப்படையில் அழைக்கப்பட்டார்கள்?

எனவே பின்வரும் விடயங்களை யாழ்ப்பாண மாவட்டக் கிளை மற்றும் தொகுதிக்கிளை தெரிவுகளில் இருக்க வேண்டும் என தங்களுக்குத் தெரிவிக்க விரும்பு கின்றேன்.
கட்சி வழக்கிலிருக்கும்பொழுது யாப்புக்கு முரணாக எந்தவொரு புதிய கிளைகளையும் தெரிவு செய்யமுடியாது. வேண்டுமெனின் கிளைகளில் இல்லாத பதவி வெற்றிடங்கள் நிரப்பலாம் என மத்திய செயற்குழு கூட்டத்தில் முடிவெடுத்தாக அறிந்து கொண்டேன். அந்தத் தீர்மானம் உண்மையாக இருக்கும் பட்சத்தில் புதிய ஒரு தெரிவும் இடம்பெறுவது பொருத்தமற்றது ஆகும். அவ்வாறு தீர்மானம் நிறைவேற்றாது இருந்தால் கட்சியின் யாப்பு விதிமுறைகளுக்கு அமைய கிளைகள் தெரிவு நீதியாக நேர்மையாக செய்யப்பட வேண்டும்.
யாழ்ப்பாண மாவட்டக் கிளை புனரமைப்புக்கு முன்னர் காங்கேசன்துறைத் தொகுதி, வட்டுக்கோட்டைத் தொகுதி ஆகிய இரண்டு தொகுதிகளையும் யாப்பின்படி புனரமைப்பு செய்ததன் பின்னர் யாழ்ப்பாண மாவட்ட கிளையை புனரமைப்புசெய்ய வேண்டும். அத்துடன் ஏற்கனவே பிரதேச தொகுதிக்கிளைகளாக பிரிக்கப்பட்டிருந்த வலிகாமம் தெற்கு, வலிகாமம் தென்மேற்கு ஆகிய பிரதேச தொகுதிக்கிளைகள், மற்றும் தீவகத்தில் உள்ள மூன்று பிரதேச தொகுதிக் கிளைகளை கட்சி வழக்கிலிருக்கும் பொழுது மீளவும் இணைக்க முடியுமா? என மத்தியசெயற்குழு முடிவெடுத்ததன் பின்னர் தொகுதிக்கிளையை புனரமைப்பு செய்ய வேண்டும்.
கட்சியில் உள்ள உறுப்பினர்கள் யாரும் மூலக்கிளை, தொகுதிக்கிளை, மாவட்ட கிளை மற்றும் வேறும் பல தெரிவுகளுக்கு வரலாம். ஆனால் இந்தத் தெரிவுகள் ஒழுங்கு முறைப்படி அமைப்பு முறைகள், விதி முறைகள் என்பவற்றின் அடிப்படையில் இடம்பெற வேண்டும். யாரும் தங்களுக்கு ஏற்ற மாதிரி நடத்திச் செல்வதற்கு இடமளிக்க முடியாது. இதனால் மேலும் மேலும் கட்சிக்குள் முரன்பாடுகளும், பகைமைகளும் ஏற்படும்.
மேற்கூறிய விடயங்கள் ஒவ்வொன்றையும் கருத்திற்கொண்டு கட்சியினை சுமூகமான முறையில் கொண்டு செல்வதற்கும் வளர்ச்சியடையச் செய்வதற்கும் தாங்கள் ஒவ்வொருவரும் அர்ப்பணிப்போடு மத்திய செயற்குழு கூட்டத்தில் முடிவெடுக்க வேண்டும் - என்றுள்ளது.
(அ-ம-26)




# பத்திரகாளி அம்மன் வேள்விப் பொங்கல் விழா

**17.06.2026**

**புங்குடுதீவு கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்**

காலை 8.00 மணி :- பத்திரகாளி அம்மனுக்கு ஸ்நபனாபிஷேகம், பொங்கல் பூஜை
காலை 11.00 மணி :- அம்மனுக்கு பொங்கல், படையல்கள் வைத்து அலங்கார பூஜை இடம்பெற்று அம்மன் உள்வீதி, வெளிவீதி வரும் காட்சியும் இடம்பெறும். பின்னர் அடியார்களுக்கு மகேஸ்வர பூஜையாகிய அன்னதானம் வழங்கப்படும்.

"பத்திரகாளி அம்மன் வேள்விப் பொங்கலில் அடியார்கள் கலந்து கொண்டு அம்மனின் அருளை பெறுவீர்கள் என வேண்டிக் கொள்கின்றோம்.

நன்றி

(CS/61674) J-1





# மாகாண வலைப்பந்தாட்டத்தில் அராலி சரஸ்வதி இந்து சாதனை

யாழ்ப்பாணம், ஜூன் 16
இந்த வருடத்துக்கான, மாகாணமட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில், அராலி சரஸ்வதி இந்துக்கல்லூரி தொடர் வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளது. 16 வயதுப்பிரிவு அணி மாகாண சம்பியனாகவும், 18 வயதுப்பிரிவு அணி மூன்றாம் இடத்தையும், 20 வயதுப் பிரிவு அணி நான்காம் இடத்தையும் பெற்று 14 வருடங்களின் பின் வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளது.
(க-555)


## சாரதி தேவை




தங்குமிட வசதி உண்டு.
**தொடர்புகளுக்கு:**
**பிரபல கட்டட பொருட்கள் விற்பனையாளர்**
**சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்**
**இல.55,57, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**T.P:077 071 6329**


## மரண அறிவித்தல்

பிறப்பு 15.05.1946
இறப்பு 15.06.2026



### திருமதி தேவராணி லோகப்பிரகாசம்

ஆலங்குழாய் சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவராணி லோகப்பிரகாசம் அவர்கள் நேற்று (15.06.2026) திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற பா.லோகப்பிரகாசம் (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், நாகேந்திரம், சண்முகராசா, புஸ்பராணி, குஞ்சரலிங்கம், இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி ப. மதனி (ஆசிரியர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி), திரு.லோ.றமணன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிராந்திய சுகாதார அலுவல்கள் திணைக்களம், பிரதேச சபை உறுப்பினர், மானிப்பாய்), திருமதி வ. றமா (வங்கி உத்தியோகத்தர், கொமர்சியல் வங்கி, நெல்லியடி கிளை) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு.ந. பஞ்சாட்சரலிங்கம் (ஆசிரியர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி), திருமதி ற.பகீரதி (அபிவிருத்தி உத்தியோகத்தர், காரைநகர் பிரதேச செயலகம்), திரு.பா.வசந்தன் (கணினி மென்பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு மாமியும், அகராயுதன், அட்சரா, கணாதிபன், யுவாகன், திவ்வியா, ஹஜானன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2026) செவ்வாய்க்கிழமை பி.ப 2.30 மணியளவில் ஆலங்குழாய், சண்டிலிப்பாயில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 31982)A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வலி.வடக்கு...

வலிகாமம் வடக்கில் மயிலிட்டி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் கடந்த 36 வருடங்களாக மீளக் குடியேற்றப்படவில்லை. பொதுமக்களின் காணிகளில் தற்போதும் இராணுவம் நிலைகொண்டுள்ளதுடன், அங்கு சட்டவிரோதக் கட்டுமானங்களையும் உருவாக்கி வருகின்றது. இதையடுத்தே, தமது காணிகளில் இருந்து இராணுவம் உடனடியாக வெளியேற வேண்டும் என்றும், அந்தக் காணிகள் தம்மிடம் மீள ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தி யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக பொதுமக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்ததாவது:-

1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி எங்கள் மண்ணிலிருந்து நாங்கள் வெளியேற்றப்பட்டோம். இன்று போர் இல்லை. ஆனால் எமது காணிகள் இன்னமும் எம்மிடம் ஒப்படைக்கப்படவில்லை. எமது காணிகளை இராணுவம் ஆக்கிரமித்து அதிலுள்ள பயன்களை அனுபவித்து வருகின்றது. இது தொடர்பில் பல்வேறு தடவைகள் பல்வேறு தரப்புகளிடம் சுட்டிக்காட்டிய போதிலும் இதுவரை எந்த மாற்றமும் நிகழவில்லை. எனவே, எமது காணிகளை எம்மிடம் ஒப்படைப்பதற்கு அரசாங்கம் இனியாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகனைச் சந்தித்து தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவொன்றையும் அவர்கள் வழங்கினார்கள். (அ-ம-26)

## குற்றவாளிகள்...

விவகாரத்தில் குற்றவாளிகள் அனைவருக்கும் விதிக்கப்பட்ட மரண தண்டனையை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்று உறுதிப்படுத்தியது.

வித்தியா படுகொலைக் குற்றவாளிகளுக்கு கடந்த 2017ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 27ஆம் திகதி மேல்நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் உள்ளடங்கிய தீர்ப்பாயத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டது. இந்தத் தீர்ப்புக்கு எதிராக குற்றவாளிகள் மேல்முறையீடு செய்தனர். எனினும், உயர் நீதிமன்றத்தில் அரசாங்கத் தரப்பில் ஆஜரான மேலதிக பிரதி மன்றாடியார் நாயகம் அசாட் நவாவி மேல்நீதிமன்றத்தின் தீர்ப்பு முற்றிலும் சரியானது மற்றும் சட்டபூர்வமானது என வாதிட்டார்.

இதனை முழுமையாக ஏற்றுக்கொண்ட பிரதம நீதியரசர் தலைமையிலான 5 பேர் கொண்ட நீதியரசர்கள் குழாம் சுவிஸ்குமார் உள்ளிட்ட 4 முக்கிய குற்றவாளிகளுக்கான மரண தண்டனையைக் கடந்த மே மாதம் 6ஆம் திகதி உறுதி செய்து தீர்ப்பளித்தது. எனினும், போதிய சாட்சியங்கள் இல்லாமையால் நான்காம் சந்தேகநபரான மகாலிங்கம் சசிதரன், எட்டாம் சந்தேகநபரான ஜெயதரன் கோகிலன் இருவரும் விடுவிக்கப்பட்டனர்.

உயர்நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பைக் குற்றவாளிகளுக்கு வாசித்துக் காட்டுவதற்காகக் கடந்த 25ஆம் திகதியன்று வழக்குத் திகதியிடப்பட்டிருந்த போதும் மரண தண்டனை உறுதி செய்யப்பட்ட குற்றவாளிகளில் ஒருவர் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்படுவதற்கு முன்னதாகவே சிறைச்சாலைக்குள் உயிர் மாய்த்தார்.

இதனைத் தொடர்ந்து நேற்றையதினம் பிரதிவாதிகள் பலத்த பாதுகாப்புடன் நிகழ்நிலையும், நேரிலும் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். இதன்போது யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நீதிபதி சதீஸ்கரன் உயர்நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பைப் பகிரங்கமாக வாசித்துக் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையை மீண்டும் உறுதி செய்தார். அத்துடன், மேன்முறையீட்டில் விடுவிக்கப்பட்ட இருவரும் நேற்று முறைப்படி விடுதலையாகினார்கள். அவர்கள் சார்பில் சட்டத்தரணி ஆறுமுகம் ரகுபதி முன்னிலையானார். (அ-ம-26-66)

## 10 என்புத்...

நடவடிக்கைகள் நேற்று நடைபெற்றன. இதன்போதே குழந்தைகளின் என்புத் தொகுதிகள் உட்பட்ட 10 என்புத் தொகுதிகள் நேற்று மீட்கப்பட்டன. அத்துடன் 5 என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன்படி செம்மணிப் புதைகுழியில் இருந்து இதுவரை 360 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்ட நிலையில், 351 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் உசைன் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தொல்லியல் பேராசிரியர் ராஜ்சோமதேவா தலைமையிலான குழுவினர், சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன், குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், சட்டத்தரணிகள், துறைசார் நிபுணர்கள், ருகுணு பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணி நிறஞ்சன் அகழ்வுப் பணிகளில் முன்னிலையாகி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## நலமாகவே...

மேலும் தெரிவித்ததாவது:-

சுரேஷ் சாலேவின் உடல்நிலை மோசமடைந்துவருவதாக அவரது மனைவியும் எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் கருத்துகளை முன்வைத்து வருகின்றனர். ஆனால், அவருடைய உடல்நிலை பாரதூரமாக இல்லை. கொழும்பு மருத்துவமனையில் மருத்துவர்களின் கண்காணிப்பின் கீழ் அவர் சிகிச்சைபெற்று வருகின்றார். அவருக்குத் தேவையான போஷாக்குகள் மற்றும் மருந்துகள் என்பன வழங்கப்படுகின்றன. மருத்துவர்களின் ஆலோசனைக்கு அமையவே நாங்கள் செயற்பட்டு வருகின்றோம் - என்றார். (அ-ம-இ)

## சாலேயின்...

மடிக்கணினி, தொலைபேசி என்பவற்றின் கடவுச்சொற்களை இதுவரை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு வழங்கவில்லை. அவர் இனியும் அவற்றை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு வழங்கக்கூடாது. தேசியப் பாதுகாப்பு மற்றும் உளவுத் தகவல் தொடர்பில் தெளிவில்லாதவர்களே இப்படியான கருத்தை வெளியிடுகின்றனர். நீதிமன்ற உத்தரவு இருந்தால் மட்டுமே அதனை வழங்க வேண்டும். ஆதலால், சுரேஷ் சாலே தற்போது தனது கடவுச்சொற்களை வழங்க வேண்டிய அவசியம் இல்லை. இது தொடர்பான மேலதிக ஆய்வுகள் அனைத்தும் நீதிமன்ற உத்தரவுடன் சுயாதீன ஆணைக்குழு முன்னிலையிலேயே இடம்பெற வேண்டும் - என்றார். (அ-ம-இ)

## தாதியர்...

கள் நேற்றுக் குழப்பத்தில் ஈடுபட்டனர். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

குறித்த தனியார் தாதியர் கல்லூரியில் தாதிய கற்கைநெறிகளை பயில்வதற்காக மாணவர்களிடம் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்காக தம்மிடம் இருந்து பெருந்தொகை பணம் அறவிடப்பட்டதாக மாணவர்கள் தெரிவித்தனர். பதிவுகளை மேற்கொள்ளும் போது கற்கை முடிவில் அங்கீகாரம் மிக்க சான்றிதழ் வழங்கப்படும் என மாணவர்களுக்குக் கூறப்பட்டுள்ளது. எனினும் கற்கை முடிவடைந்து நீண்ட நாள்களாக மாணவர்களுக்கு அந்தச் சான்றிதழ் வழங்கப்படவில்லை.

இதனையடுத்து கல்லூரியின் நிர்வாகிகளுக்கும் மாணவர்களுக்கும் இடையில் குறித்த வளாகத்தில் நேற்றுக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இதன்போது உடனடியாக எமக்குச் சான்றிதழ் வழங்கப்படவேண்டும் இல்லாவிடில் தாம் செலுத்திய பணத்தை திரும்ப செலுத்துமாறு மாணவர்கள் தரப்பில் கோரப்பட்டுள்ளது. அதற்கு பொறுப்பான பதிலை கல்லூரி நிர்வாகிகள் வழங்கவில்லை. இதையடுத்தே அங்கு குழப்பநிலை ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் மாணவர்களால் பொலிஸாரிடம் முறையிடப்பட்ட நிலையில், சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் நிர்வாகிகள் ஐந்து பேரையும் மாணவர்கள் சிலரையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர். (அ-ம-110)

## சி.ஐ.டி.யின்...

உள்ளிட்ட 6 பேருக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் நேற்றையதினம் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சாலேயிடம் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளுக்கு பாதகம் ஏற்படும் வகையிலும், நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையிலும் மின்னணு ஊடகங்கள் வாயிலாகக் கருத்துக்களை வெளியிட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழேயே இந்த விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இந்த விசாரணைகள் தொடர்பில் ஜூலை மாதம் முதலாம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அவர்களுக்கு அறிவித்தல் அனுப்பவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-இ)

## ஐந்து...

ஆண்டில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை நடத்தி வந்தது. அந்த விசாரணைகளின் அடிப்படையிலேயே மட்டக்களப்பில் இடம்பெற்ற 5 படுகொலைகளுடன் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்), ராசிக் மொஹமட் பைஸ் மற்றும் ஹமீத் லெப்பே மொஹட் ஆகியோருக்குத் தொடர்புகள் உள்ளன என்று கூறப்பட்டுள்ளது.

கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டு காணாமற்போன வழக்கில் பலத்த பாதுகாப்புடன் பிள்ளையான் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-ம-இ)

## அமெ.-...


களின் அதிபர்களும் போர்நிறுத்தம் தொடர்பான அறிவிப்பை நேற்று வெளியிட்டுள்ளனர்.

ஈரான் அணுவாயுதங்களைத் தயாரிக்கின்றது என்றுகூறி ஈரான் மீது அமெரிக்க இஸ்ரேல் கூட்டுப்படைகள் கடந்த பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி தாக்குதல்களை நடத்தின. இதில் ஈரானின் உச்சதலைவர் அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்ட நிலையில் இதற்கு வலுவான பதிலடியை ஈரான் வழங்கியது. தாக்குதல்கள் பரஸ்பரம் தொடர்ந்த நிலையில் கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக உலகமெங்கும் பல்வேறு நெருக்கடிகள் தோன்றின. ஹோர்முஸ் நீரிணையை ஈரான் முடக்கியதால் எரிபொருள்களுக்கு உலகளாவிய பற்றாக்குறை ஏற்பட்டது.

இதற்கிடையே ஈரான் அமெரிக்கா இடையில் அமைதியை ஏற்படுத்த பாகிஸ்தான், சவூதி, துருக்கி உள்ளிட்ட நாடுகள் தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வந்தன. இவ்வாறான நிலையிலேயே, அமெரிக்காவும் ஈரானும் போர்நிறுத்தத்துக்குச் சம்மதம் தெரிவித்துள்ளன. ஈரான் மீதான அனைத்துப் பொருளாதாரத் தடைகளை நீக்குவதற்கு அமெரிக்காவும், அணுவாயுதத் திட்டங்களைக் கைவிடுவதற்கு ஈரானும் சம்மதித்ததைத் தொடர்ந்தே இந்த அமைதி ஒப்பந்தம் இறுதியாகியுள்ளது.

சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகவுள்ளது. இதை அமெரிக்க அதிபர் ட்ரம்பும், ஈரானின் அதிபர் மசூத் பெஷஸ்கியானும் உறுதிப்படுத்தியுள்ளனர். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து 10 தினங்கள் காலை, மாலை உற்சவங்கள் இடம் பெறும். (சு-66)

# சர்வதேச அழுத்தம் இல்லாது மாகாணத் தேர்தல் நடக்காது

## அரசியல் ஆய்வாளர் யோதிலிங்கம் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜுன் 16**
**சர்வதேச அழுத்தம் இல்லாமல், மாகாண சபைத் தேர்தல் நடப்பது சாத்தியமற்றது என்று அரசியல் ஆய்வாளர் சி.அ.யோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.**

தற்கால அரசியல் நிலவரம் தொடர்பில் அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

நாட்டில் மாகாணசபைத் தேர்தல் விவகாரம், மீண்டும் பேசுபொருளாகியுள்ளது. ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, இந்த வருடம் மாகாண சபைத் தேர்தல் நடைபெறாது. அடுத்த வருடமே அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்று தெரிவித்திருந்தார். இதற்கு தமிழ் அரசியல்வாதிகளிடமிருந்தும், சிங்கள எதிர்க்கட்சிகளிடமிருந்தும் எதிர்ப்புகளும், கண்டனங்களும் வெளிவந்தன. தோல்விப்பயம், பேரினவாத நிலைப்பாடு, மாகாணசபை முறை மீதான வெறுப்பு ஆகிய காரணங்களால் அரசாங்கம் தேர்தலை நடாத்த விரும்பவில்லை. இதில் பிரதானமானது தோல்விப்பயமாகும்.

சிங்களப் பிரதேசங்களில் அரசாங்கத்தின் செல்வாக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. நிர்வாக ஆற்றல் அரசாங்கத்திடம் குறைவு என்ற கருத்தும் சிங்கள மக்கள் சிலரிடம் உண்டு. வடக்கு கிழக்கிலும் முன்னைய செல்வாக்கு தேசிய மக்கள் சக்திக்கு தற்போது இல்லை. தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமை, தொடர் ஆக்கிரமிப்புக்கள், பாடகர் கைது, அரசியல் கைதிகள் விடுவிக்காமை, பறித்த காணிகளை மீள வழங்காமை , போன்றன தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தியை உருவாக்கியுள்ளன.

இதைவிட மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றால் 13 ஆவது திருத்தத்திலுள்ள அதிகாரங்களை முழுமையாக வழங்கும் படி கோரிக்கைகள் வரும் எனவும் அரசாங்கம் அஞ்சுகின்றது. தமிழ் மக்களுக்கு ஒரு சுயாதீனமான அரசியல் களம் கிடைத்துவிடும் என்ற அச்சமும் தேசிய மக்கள் சக்திக்கு உண்டு. இந்த அரசியல் களத்தை தேசிய மக்கள் சக்தியினர் விரும்பவில்லை. சர்வதேச பிராந்திய அழுத்தங்கள் ஏற்பட்டால் மாத்திரமே அரசாங்கம் தேர்தலை நடத்த முயற்சிக்கும் குறிப்பாக பிராந்திய அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் இந்தியா தற்போது அதற்குத் தயாராக உள்ளது எனக் கூற முடியாது - என்றுள்ளார். (க)



## புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியின் மாணவர் நாடாளுமன்றத் தேர்தல்

யாழ்ப்பாணம், ஜுன் 16
புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியின் மாணவர் நாடாளுமன்றத் தேர்தல், பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் சி. திரிகரனின் வழிகாட்டலில் நடைபெற்ற தேர்தலில், மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடனும், பொறுப்புணர்வுடனும் தமது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினர்.
தேர்தல் நடைமுறைகளைப் பிரதிபலிக்கும்வகையில் வாக்காளர் பதிவு, வாக்குச்சீட்டு வழங்கல், இரகசிய வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை உள்ளிட்ட நடவடிக்கைகளும் முறையாக முன்னெடுக்கப்பட்டன. (க)

## நீளிரா திரைப்படம் தொடர்பில்

# இயக்குநர் சோமிதரனுடன் பகிரங்கக் கலந்துரையாடல்

நீளிரா திரைப்படம் தொடர்பில், அந்தத் திரைப்படத்தின் இயக்குநர் சோமிதரனுடன் வெளிப்படையான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.
யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கத்தில் இன்று மாலை 6 மணியளவில் இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.
நீளிரா திரைப்படம் தொடர்பில் மட்டுமல்லாமல், எங்களின் கதைகளைத் திரைப்படமாக உருவாக்குவது தொடர்பிலும் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறும் என்று ஏற்பட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம)



அசை

# ஓட்டுமடம் - மானிப்பாய் வீதியில் வீதி மின்விளக்குகள் பொருத்தல்



யாழ்ப்பாணம், ஜுன் 16
ஓட்டுமடம் - மானிப்பாய் வீதியில் அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் வீதி மின்விளக்குகள் பொருத்தும் பணிகள் முன்னெடுக்கப்ப்ங டுள்ளன. இரவு நேரப் பாதுகாப்பையும், பொது மக்களின் போக்குவரத்து வசதியையும் கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாநகரசபை உறுப்பினர் மதுசிகான் தெரிவித்துள்ளார். எதிர்காலத்தில் தேவையுள்ள பகுதிகள் அடையாளம் காணப்பட்டு, அந்தப் பகுதிகளிலும் தெருவிளக்குகள் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

**வேலையாட்கள் தேவை**
இலங்கையின் முன்னணி நிறுவனத்தில் யாழ்ப்பாணத்திற்கு வேலை வெற்றிடங்கள் உள்ளன. O/L சாதாரண தரத்தில் ஆறு பாடங்களிலும் உயர்தரத்தில் மூன்று சித்திகளும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.
**075 535 9166, 077 289 3532**
(CS/61673) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media